# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

## ஊழியர்களின் உழைப்பிற்கும் ஒற்றுமைக்கும் கிடைத்திட்ட வெற்றி!!!!

அன்பான தோழர்களே,

கடந்த சில ஆண்டுகளாக நமக்கு மறுக்கப்பட்டு வந்த PLI, ஊழியர்களின் கடும் உழைப்பினாலும், இரண்டு சங்கங்களின் கூட்டு முயற்சியின் காரணமாகவும் 2014-15ஆம் ஆண்டிற்கான PLI இந்த ஆண்டு ரூ.3,000/- கிடைக்க உள்ளது.

ஆனால் இந்த PLIஐ NFTE சங்கம் மட்டுமே போராடி(?) பெற்றதாக தமிழ் மாநில NFTE சங்கம் தனது இணைய தளத்தில் எழுதியுள்ளது. NFTE சங்கத்தின் கடந்த கால வரலாற்றையும், நிகழ்காலத்தில் அதன் அகில இந்திய தலைவர் எடுத்த நிலைபாட்டையும் நாடே அறியும்.

'அனைவருக்கும் போனஸ்' என்ற கோரிக்கையை முன்வைத்து தோழர் K.G.போஸ் குரல் கொடுத்த போது 'அனைவருக்கும் போனஸ் என்றால் ஒருவருக்கும் போனஸ் இல்லை' என்று கூறியது NFTEயின் அன்றைய தலைமை தான்.

1996ல் உச்ச வரம்பில்லா போனஸ் கோரி அனைத்து மத்திய அரசு ஊழியர்களும் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த போது 4500 ரூபாய் உச்ச வரம்பு என்பதை ஏற்றுக் கொள்ளலாம் என்று குறுக்கு சால் ஓட்டியது NFTEயின் தலைமை என்பதை யாரால் மறுக்க முடியும்?

BSNL நிறுவனம் 10,000 கோடி ரூபாய்களுக்கு மேல் லாபமீட்டிய போது 2003-2004ல் 75% போனஸ் போதும் என்று ஏற்றுக் கொண்டது அன்றைக்கு அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக இருந்த NFTE தானே.

2004ல் அங்கீகாரம் பெற்ற உடன் மீதமிருந்த 25% போனஸை பெற்றுத் தந்தது BSNL ஊழியர் சங்கம் என்பதை மறுக்க முடியுமா?

அதுவரை 6000 ரூபாய் என்று இருந்த போனஸை BSNL ஊழியர் சங்கம் அங்கீகரிக்கப்பட்ட உடன் 10,000 ரூபாயாக உயர்த்திப் பெற்றுத் தந்தது BSNL ஊழியர் சங்கம் தான் என்பதை மறுக்க முடியுமா? இல்லை மறக்கத்தான் முடியுமா?

BSNL நிறுவனம் நஷ்டத்தில் இயங்கும் போது PLI வழங்க இயலாது என நிர்வாகம் முடிவு எடுத்த போது அப்போதே அதனை எதிர்த்து குரல் கொடுத்த ஒரே சங்கம் BSNL ஊழியர் சங்கம் தானே தவிர வேறு யாரும் இல்லை.

ஒரு பொதுத்துறை நிறுவனத்தின் நஷ்டத்தில் இயங்குவதற்கும் PLIக்கும் தொடர்பு இல்லை என்ற DPEயின் உத்தரவை எடுத்துக் கொடுத்து அதற்காக தொடர்ந்து போராடி வந்தது BSNL ஊழியர் சங்கம் தானே தவிர NFTE சங்கம் இல்லை என்பதை நினைவு படுத்த விரும்புகிறோம்.

BSNL ஊழியர் சங்கத்தின் தலைமையிலான FORUM OF BSNL UNIONS/ASSOCIATION OF EXECUTIVES AND NON-EXECUTIVES யின் தொடர் முயற்சியின் காரணமாக தொடர்ந்து அதிகரித்து வந்த நஷ்டத்தை குறைத்து செயல்பாட்டு லாபமீட்டும் நிறுவனமாக மாற்றியது என்பது தானே இன்றைய எதார்த்தம். BSNL ஊழியர்களும் அதிகாரிகளும் FORUMத்தின் அறைகூவலை ஏற்று உழைத்தது தானே இதற்கான முதன்மையான காரணம்.

நாங்கள் அங்கீகாரத்திற்கு வந்தால் உடனே PLI பெற்றுத்தருவோம் என்று வெற்று வாக்குறுதியை கொடுத்து, அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற சிந்தனை கூட இல்லாமல் இரண்டாண்டு காலம் சும்மா இருந்தது NFTE சங்கம் தானே?

பூஜா மற்றும் தீபாவளி சமயங்களில் பெற வேண்டிய PLIஐ தேர்தல் நேரத்தில் நிர்வாகத்துடன் முதன்மை அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தின் பொது செயலாளர் அந்த தேதியில் வர இயலாது என்று சொன்ன அதே தேதியில் ஓடோடி போய் "ஒரு அற்பத் தொகை"(PAULTRY AMOUNT)யினை ஏற்றுக் கொண்டு வந்தது NFTEயின் அகில இந்திய தலைவர் தோழர் இஸ்லாம் அஹமது என்பது NFTE இணைய தளத்தில் வந்த செய்திதான் என்பதை NFTEயின் தமிழ் மாநில தலைமை மறுக்க முடியுமா? (தமிழ் மாநில NFTE சங்கமே தனது சுற்றறிக்கையில் 'தொகை எவ்வளவு என்பதை விட உரிமை மீட்பு என்கிற அணுகு முறையை நமது சங்கம் மேற்கொண்டது' என்று எழுதி உள்ளது, NFTEயின் தலைவர் DOUBLE DIGIT PLIஐ ஏற்றுக் கொண்டார் என்பதன் ஒப்புதல் வாக்கு மூலம் தானே).

அந்த அற்பத்தொகையினை ஏற்றுக் கொள்ள முடியாது என உறுதியாக BSNL ஊழியர் சங்கம் போராட்டம் நடத்திய காரணத்தால் தான் நிர்வாகம் அந்த முடிவை நிறுத்தி வைத்தது என்பது அனைவருக்கும் தெரியும். அன்று அந்த முடிவு நிறுத்தப்பட்டதால் தான் இன்று BSNL ஊழியர் சங்கம் மற்றும் NFTE சங்கம் ஆகிய இரண்டு அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் பொது செயலாளர்களும் ஒன்றாக ஒரே குரலில் பேசியதால் நிர்வாகம் 3,000/- ரூபாய் PLIக்கு ஒத்துக் கொண்டது என்பது அனைவருக்கும் தெரியும். எனவே இன்றைக்கு BSNLல் உள்ள CMD முதல் காசுவல் மஸ்தூர் வரை அனைவருக்கும் PLI பெறுவதற்கு இரண்டு சங்கங்களின் பொது செயலாளர்களும் உறுதியாக ஒற்றுமையாக நின்றதே காரணம். இதனை மறுத்து தனிப்பட்ட சங்கத்தின் சாதனை என்று சொல்லிக் கொள்வதற்கு காரணம் என்ன?

தமிழக NFTE தலைமை கடந்த காலங்களில் இரண்டு சங்கங்களின் ஒற்றுமைக்கு குரல் கொடுத்து வந்த சூழ்நிலையில் இன்று ஏற்பட்ட மாற்றத்திற்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை? பெற முடியாததற்கு நிர்வாகத்தையும்/ அரசாங்கத்தின் கொள்கைகளையும் குறை சொல்லாமல் BSNL ஊழியர் சங்கத்தை குற்றம் சொல்வதும், ஒற்றுமையாக இரண்டு சங்கங்களும் பெற்றுத்தந்த சலுகைகளை தானே பெற்றுத் தந்தது என்று வீண் பெருமை பேசுவதும் எதிர்காலத்தில் நமது ஒற்றுமையை சீர்குலைக்கும் என்பதை தமிழக NFTE தலைமை புரிந்துக் கொண்டு செயல்பட வேண்டும் என்பதே நமது விருப்பம். அது நமது விருப்பம் மட்டுமல்ல. 01.01.2017 முதல் நடைபெற உள்ள ஊழியர்களின் புதிய ஊதிய மாற்றத்திற்கும், இதர பிரச்சனைகளின் தீர்விற்கும் தேவை.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

(A.**பாபு ராதாகிருஷ்ணன்**)
**மாநில செயலாளர்**